12.06.2024 ம.சா.1 செல்வக்குமார் Mcop 164 of 2022

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் டிரைவராக வேலை செய்து வந்தேன். நான் படிக்கவில்லை. விபத்து சமயம் நான் யாரிடம் வேலை செய்தேன் என்றால் நான் வாடகை கார் டிரைவராக வேலை செய்தேன். ஆக்டிங் டிரைவராக இருந்தேன். மனுதாரரின் வலதுகை விபத்தினால் முழுவதும் நீக்கப்பட்டுள்ளது. விபத்து ரோட்டின் மையபகுதியில் நடந்தது என்றால் சரிதான். பேரூந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். நான் 19 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் என் வயது, வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அஜாக்கிரதையாக கையை வெளியே வைத்திருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கையை உள்ளே தான் வைத்திருந்தேன். விபத்து நடந்தவுடன் நான் புளியங்குடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின்பு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்று பின்பு நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மருத்துவரின் விரிவுரை இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ பில்கள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு கை இழப்பு ஏற்பட்டது மருத்துவரின் சிகிச்சை கவனக்குறைவினாலும் ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தின் போதே கை மிகவும் சேதம் அடைந்தது. என் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த அரசு பேரூந்தின் ஒட்டுனரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 2ம் எதிர்மனுதாரரை ஈட்டுறுதி செய்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 3ம்

எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து சமயம் நான் அரசு பேரூந்தில் தான் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அரசு பேருந்தின் ஓட்டுனர் மெதுவாக தான் சாலை விதிகளை கடைபிடித்து ஓட்டினார் என்றால் சரிதான். பேரூந்தின் மீது மோதிய லாரியின் டிரைவர் தான் அஜாக்கிரதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரிதான். விபத்து பற்றி நான் சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் லாரியின் ஓட்டுனர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு முழு காரணம் 1ம் எதிர்மனுதாரர் என்றால் எனக்கு தெரியாது. 5ம் எதிர்மனுதாரர் அவசியமில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. எனக்கு 3ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால சரியல்ல. 5ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(5ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையை 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்புக்கொள்ளப்படுகிறது)